சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.15.10.2025.
OS.No. 678/2018
PW1 (மறு அழைப்பு) : பன்னீர்செல்வம் (வயது 70 ) த/பெ.கோவிந்தசாமி
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)
இ.ம.எண்.10/2025 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**1,2 பிரதிவாதிகள் தரப்பு கு.வி**

நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு நான் தான் விவரங்களை கூறினேன். எனது வழக்கிற்கு பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.1 ஆம் பிரதிவாதி மாணிக்கம் எனது பெற்றோரின் முதல் குழந்தை என்றால் சரிதான். எனது சகோதரிகளுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 20 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது.

தாவா ஏ அட்டவணை சொத்து எனது தாயார் சிவபாக்கியத்தால் கிரயம் பெற்ற சொத்து என்றால் சரிதான். பி அட்டவணை சொத்து எனது தகப்பனார் கிரயம் பெற்ற சொத்து என்றால் எனது தகப்பனாரும் எனது அண்ணன் தம்பிகளும் சேர்ந்து கிரயம் பெற்ற சொத்து. எனது தாவா பி அட்டவணை சொத்தை கிரயம் வாங்கும்போது நானும் எனது சகோதர சகோதரிகளும் இளவராக இருந்தோம் என்றால் 1 ஆம் பிரதிவாதியை தவிர மற்றவர்கள் இளவர்களாக இருந்தோம்.

வழக்கு ஏ அட்டவணை சொத்து பொதுகுடும்ப நிதியிலிருந்து எனது தாயார் பெயரில் கிரயம் வாங்கப்பட்டது என்பதை காட்டும் வகையில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 எனது தாயார் பெயரில் ஏற்பட்ட தாவா ஏ அட்டவணை சொத்திற்கான கிரய ஆவணத்தில் பொது குடும்ப நிதியிலிருந்து கிரயம் பெறப்பட்டுள்ளது என்ற வாசகம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.5 ஆவணத்தில், சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவிற்காக தாக்கல் செய்யப்பட்டதாக சொல்லியுள்ள பெயரில் எனது தாயார் பெயர் இடம்பெற்றுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 எனது தந்தை பெயரில் கிரயம்

பெற்றுள்ள கிரய பத்திரத்தில் பொது குடும்ப நிதியிலிருந்து சொத்து வாங்கப்பட்டதாக வாசகம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை.

வா.சா.ஆ.5, 6 ஆவணத்தின் அசல் 1 ஆம் பிரதிவாதியின் வசம் உள்ளது. அவ்வாறு 1 ஆம் பிரதிவாதி வசம் மேற்படி ஆவணங்கள் உள்ளது என்று எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு ஏ அட்டவணை சொத்தில் நான் மற்றும் எனது சகோதர சகோதரிகள் சேர்ந்து நகை கடை தொழில் செய்து வந்தோம் என்று காட்டுவதற்கு தொழில் ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

1 ஆம் பிரதிவாதிக்கு எனது பெற்றோர் 07.09.2005 அன்று தாவா ஏ அட்டவணை சொத்தை பொறுத்து உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளதாக 1 ஆம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் தப்பு தான். எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது பெற்றோர் இறக்கும் முன்பே தாவா ஏ அட்டவணை சொத்தை எனது சகோதரரான 1 ஆம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை.

நாங்கள் மைனர்களாக இருந்த காலத்தில் எனது அப்பா மற்றும் 1 ஆம் பிரதிவாதியும் சேர்ந்து தான் குடும்ப சொத்துக்களை பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல, அனைவரும் சேர்ந்து தான் பராமரித்து வந்தோம்.

<u>**கு.வி தொடர்ச்சி**</u> - வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
பன்னீர்செல்வம்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.10.15 19:15:05 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி